**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 03-ஆம், நாள் வெள்ளிக்கிழமை**
**CNR No.TNTI12-000002-2017**
**இடைநிலை மனு எண்.2/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.3/2017**

சந்திரகாந்தி ... மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

1.ஏ.விஜயகுமார்

2.எஸ்.சாரதாமணி

3.T.பாக்யலட்சுமி

4.எம்.கமலவேணி

5.முருகேசன்

6.சுந்தர்ராஜன்

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 11.10.2023 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.சந்தானம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றா தரப்பினராக உத்தரவிடப்பட்டுள்ளதால், 2 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு இம்மனுவிற்கு அறிவிப்பு

அனுப்பாமலும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவில் குறிப்பிட்டுள்ளபடி தாவாவை திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17–ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு:–**

2.1.) மனுதாரருக்கு பிதுராஜித வகையில் அதாவது மனுதாரரின் தகப்பனார் முத்துசாமியின் தகப்பனரான செலம்பரசகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கடந்த 30.08.1961ம் தேதி அன்னூர் சார்பதிவக பாகசாசனப்பத்திர எண்.1655/1961–ன்படி மனுதாரரின் தகப்பனார் செலம்பரசகவுண்டர் மகன் முத்துச்சாமியும், அவரது இளைய சகோதரர் வேல்முத்துகவுண்டரும் பாகபிரிவினை செய்து கொண்டதாகவும், மனுதாரர் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்படி முத்துசாமிகவுண்டர், மனுதாரர் மற்றும் மனுதாரரின் சகோதரியான வசந்தகோகிலம் ஆகிய மூவரும் கடந்த 03.12.1999ம் தேதி அன்னூர் சார்பதிவக பாகசாசனப்பத்திர எண்.2594/1999–ன்படி பாகப்பிரிவினை செய்து ஆண்டு அனுபவித்து வருகிறதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) தாவா சொத்தானது சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகவும்

பிதுராஜிதபடியும் ஆண்டு அனுபவித்து வரும் பாதையானது கிழக்கிலிருந்து மேற்காக சுமார் தென்வடல் 24 அடி அகலலும், கிழமேல் 700 அடி நீளமுமாக சென்று தென்புரமாக திரும்பி கிழமேல் 24 அடி அகலமும் தென்வடல் 150 அடி நீளமும் கொண்ட தட பாத்தியப்படி மனுதாரரது சொத்துக்களை அடைந்து மனுதாரரும், அவரது முன்னோர்களும் கடந்த 30.11.2016 ம் தேதிவரை எந்தவித இடையூறும், இடைஞ்சலும் இன்றி மனுதாரர் சொத்திற்கு பாதையாக உபயோகித்து வருகின்றதாகவும், மேற்படி தடத்திற்கு உண்டான க.ச. எண்களை மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்குரையில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்படி தவறு மனுதாரரின் வயோதிகத்தினால் ஏற்பட்டுவிட்டது என்றும், வழக்குரையை திருத்தம் செய்ய அவசியமும் நியாயமும் இருகிறதாகவும், மனுவினை அனுமதிக்கவில்லை என்றால் மனுதாரருக்கு பெரும் கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1 ம் <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-</u>**

3.1.) மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை மேல்முத்துக்கவுண்டரின் வகையறாவிடமிருந்து 04.07.2016 ம் தேதிய அன்னூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 4549/2016 என்ற எண்ணாக பதிவாகியுள்ள கிரைய பத்திரப்படி

அவிநாசி வட்டம், பொங்கலூர் கிராமம், க.ச.எண்.242/1 வண்டித்தடத்தில் 0.12 ஏக்கரில் பொதுவில் 2/3 பாகமும் மற்றும் க.ச.242/2-ல் 0.22 ஏக்கரும், 243/3-ல் 0.16 ஏக்கரும், 242/4-ல் 1.26 ஏக்கரும் 242/5-ல் 1.43 ஏக்கரும் பின்னும் க.ச.எண்.242/6-ல் 1.94 ஏக்கரும் மற்றும் க.ச.243/2-ல் 0.58 ஏக்கரும், க.ச.243/3-ல் 0.68 ஏக்கரும், ஆக மொத்தம் 6.35 ஏக்கர் விஸ்தீரணமுள்ள விவசாய பூமியை தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்று மேற்படி பூமியின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறதாக கூறப்பட்டுள்ளது.

3.2.) மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரின் சொத்திற்கு அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர் என்றும், மனுதாரரின் தாவா சொத்து க.ச.எண்.253/2 நெ.காலைக்கு செல்ல வழித்தடமானது க.ச.எண்.242/1 ஆக தனி உட்பிரிவு செய்யப்பட்டு உள்ளதாகவும், மேற்படி க.ச. எண்.242/1 பொது வழித்தடமானது 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.242/2, 4, 5 ஆகிய காலைகளில் மேல்கோட்டில் தென்மேற்காக செல்கிறதாகவும், அந்த பொது வழிதடத்தின் வழியாக மேற்படி க.ச.எண்.253/2 நெ.காலைக்கு மனுதாரர் சென்று வருகிறதாகவும், மேற்படி வழித்தடமானது மற்ற காலைகளுக்கும் பொது வழித்தடமாக உள்ளதாகவும், இந்த சங்கதிகளை மறைத்து மனுதாரர் இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.242/5-ல் உள்ள பூமியில் நடுவே கிழமேலாக மேற்படி மனுதாரருக்கு தட பாத்திய உரிமையுள்ளதாக கூறி பொய்யாக

வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3.3.) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.243/7–ல் உள்ள பூமிக்கு செல்ல வழித்தடமானது க.ச.எண்.243/5 என தனி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழித்தடமானது க.ச.எண்.217 காலையில் கிழமேலாக வந்து மேற்படி காலையில் மேற்கோட்டில் வடக்கு நோக்கி வந்து பின்பு மற்றும் க.ச.எண்.243 காலையில் வடகோட்டில் மேற்கே வந்து பின்பு தெற்கு நோக்கி திரும்பி மீண்டும் கிழக்கு நோக்கி செல்லும் பொது வழிதடத்தில் பொது கிணற்றுக்கும் க.ச.எண்.243/7–ல் உள்ள மனுதாரரின் சொத்துக்கும் நாளது தேதி வரை எவ்வித இடையூறும் இல்லாமல் மனுதாரர் சென்று வருகிறதாக கூறப்பட்டுள்ளது.

3.4.) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்கு செல்ல ஏற்கனவே மாமூல் வழிதடம் (க.ச.எண்.242/1 மற்றும் க.ச.243/5–ல்) இருந்து வருகிறதாகவும், இந்த வழித்தடங்களை மனுதாரர் மறைத்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், ஏற்கனவே வழித்தடம் உள்ள பூமிக்கு புதிதாக வேறு வழிதடம் வேண்டி சட்டப்படி தாவா தாக்கல் செய்ய முடியாது என்றும், மனுதாரர் தாக்கல் செய்த தற்காலிக உறுத்துக்கட்டளை இடைமனு எண்.11/2017–ஐ இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி உத்தரவில் பக்கம் 11 பத்தி 5.4–ல் கடைசி 5 வரிகளில் " எதிர்மனுதாரர் தரப்பில் சொல்வது போல தாவா வண்டிப்பாதையானது எந்த காலை எண்ணில் தொடங்கி எந்த காலை எண்

வழியாக வண்டிப்பாதை சென்று எந்த காலை எண்ணில் முடிவடைகிறது என்பதை குறிப்பிட்டு கூறாததால் மனுதாரர் சொல்வது போல வண்டிப்பாதை உள்ளதா என்பதை அறியமுடியவில்லை" – என்று கூறியுள்ளது.

3.5.) மேலும் பக்கம் 12 பத்தி 5.5–ல் 7 வது வரியில் " மனுதாரர் சொல்வது போல மனு பாதையானது நிலவியல் ரீதியாக உள்ளதா என்பதை மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இருந்து அறியமுடியவில்லை. ஏனெனில் எந்த எந்த காலைகள் வழியாக வண்டிப்பதை செல்கிறது என்பதை மனு சொத்து விவரத்திலும் மனு பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை" என்று இந்நீதிமன்றம் தனது உத்தரவின் முடிவில்/தீர்ப்பில் (findings) குறிப்பிட்டுள்ளதாகவும், இ.ம.எண்.11/2017–ல் மேற்படி உத்தரவு தெரிவித்த பின்பு மனுதாரர் பிராதை திருத்தம் செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளது மனுதாரர் பிராதில் உள்ள குறையை நிவர்த்தி செய்யும் (to fill–up the lacuna) முயற்சி என்றும், மனுதாரருக்கு வயதாகிவிட்டதாகவும், வயோதிகத்தினால் தடத்திற்கு உண்டான க.ச.எண்களை வழக்கு தாக்கல் செய்யும் பொழுது குறிப்பிடவில்லை என பொய்யாக கூறியுள்ளதாகவும்

3.6.) <u>வழக்குரை ஆவண எண்.2–ல் (03.12.1999) தேதிய பாகசாசனத்தில் வழித்தடம் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது</u>

<u>பொது ஷரா:</u>

கோவை– சக்தி ரோட்டிலிருந்து பொங்கலூருக்கு தெற்கே மேற்கே பிரியும்

மாமூல் பொது வண்டி வாகனாதிகள் செல்லும் தடமானது துரைசாமி நாய்க்கர் பூமியில் வடக்கும், சின்னச்சாமி வகையறா பூமிக்கும் தெற்கும் கமலாத்தாள் பூமிக்கு கிழக்கும் நஞ்சப்பகவுண்டர் பூமிக்கும் தெற்கும் இவைகளுக்கு இடையில் வருகின்ற மேற்படி தடத்திலும் தொடர்ந்து 217/1பி, 217/1எ நெ.காலைகளில் வடகோட்டில் கிழமேலாகவும் தொடர்ந்து 243 நெ.காலையில் வடகோட்டில் கிழமேலாகவும் தொடர்ந்து தெற்கு நோக்கி தென்வடலாகவும் தொடர்ந்து கிழக்கு நோக்கி கிழமேலாக கிணர் பாக பூமி வரையிலும், மேற்படி 243 நெ.யில் தென்வடலாக வரும் தடத்திலிருந்து தொடர்ந்து மேற்கு நோக்கி " பி " பாக ஏ.0.58 செண்ட் பூமிக்கு தென்புறத்தில் கிழமேலாக க.ச.242 நெ.காலை வரை உள்ள தடத்திலும் நம் இரு பாகஸ்தர்களும் அவரவர் பாக பூமிகளுக்கு வண்டி வாகனாதிகள் கால்நடை வகையறாக்களை ஓட்டிப் போய் வந்து கொள்ள உள்ளவர்கள். க.ச.242/1நெ.காலையில் செல்லும் மாமூல் வண்டித்தடத்திலும் மற்றும் க.ச.259 நெ.காலைக்கு செல்லும் மாமூல் வண்டித்தடத்திலும் நான் அனைவரும் வண்டி வாகனாதிகள் ஓட்டி கொள்ளும் தடபாத்தியம் சகிதம். க.ச.243 நெ.காலையில் மாமூல் வண்டித்தடத்தில் பூமிக்கு கீழ் குழாய் பதித்து அவரவர் பாக பூமிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்வதை நான் ஒருவருக்கொருவர் தடை செய்யக்கூடாது என்றும், மேலும் மேற்படி கிணற்றிக்கு சேர்ந்த மற்ற பங்காளிகளும் மேற்படி வண்டித்தடத்தில் பூமிக்கு கீழ் குழாய் பதித்து தண்ணீர் கொண்டு

செல்வதை நாமும் தடை செய்யக்கூடாது. க.ச.243 நெ.காலையில் உள்ள கிணற்றிற்கு சேர்ந்த 41 நெ. மின்சர்வீசிலிருந்து ஆர்.எப்.சி பெற்று நாமும், மேலும் மற்ற பாகஸ்தர்களும் அவரவர் முறை வீதம் பயன்படுத்தி கொள்வதை ஒருவருக்கொருவர் தடை செய்யக்கூடாது என்றும், இந்த ஷரத்தை ஏற்றுக்கொண்டு நம் பங்காளியான முத்துச்சாமி கவுண்டரும் இதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்று இந்த பத்திரத்தில் கண்டபடி மேற்படி சொத்துக்களை உட்பிரிவு செய்து கொள்ளவும் மேற்படி முத்துசாமி கவுண்டர் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி உட்பிரிவு செய்து கொள்வதை மேற்படி முத்துசாமிகவுண்டர் மறுத்தாலும் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதனாலும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.7.) <u>வழக்குரை ஆவண எண்.3–ல் (31.08.2015ம் தேதிய பாகசாசனத்தில்) வழித்தடம் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது</u>

<u>பொது ஷா</u>

மேற்படி பூமிக்கு நம் இருவருக்கும் மற்றும் நம் தகப்பனார் முத்துச்சாமிகவுண்டர் அவர்களுக்கும் ஏற்பட்ட 2594/1999 நெ.பாகசாசன பத்திரத்தில் பொதுவில் ஷராவில் கண்டுள்ள அனைத்து மாமூல் தடங்களிலும் மற்றும் தண்ணீர் ஓட்டிக்கொள்ளும் பாத்தியம் மற்றும் சகல விதமான பாத்தியங்களையும் நாம் மாமூல்படி அனுபவித்து கொள்ள உள்ளவர்கள்.

3.8.) மனுதாரர்கள் தனது பிராதை திருத்தம் செய்யக்கோரும்

வண்டித்தடமானது இந்த 1ம் எதிர்மனுதாரரின் சொத்திற்கு மத்தியில் செல்கிறது என்பதை நிரூபிக்க மனுதாரர் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் மனுதாரருக்கு ஏற்கனவே மாமூல் வண்டித்தடம் க.ச.நெ.242/1 மற்றும் 243/5–ல் உள்ளதாகவும், அதை இந்நீதிமன்றம் நியமித்த நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாகவும், அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய காலம் கடந்து (barred by limitation) இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனு புதிய வழக்கு மூலத்தை (Introducing new case) உள்ளீடு செய்யும் முயற்சி என்றும், மனு அனுமதிக்கப்பட்டால் வழக்கின் தன்மையை (change character of suit )மாற்றிவிடும் என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டால் முற்றிலும் இவ்வழக்கு புதிய வழக்காக மாறிவிடும் என்று கூறப்பட்டுள்ளது.

3.9.) எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.நெ.242/5 & 243/2 விவசாய பூமியின் நடுவே மொத்தம் (700 அடி + 150 அடி) 850 அடி நீளமும் 24 அடி அகலமும் (20400 சதுரடிகள் ) சுமார் 47 செண்டில் வண்டிப்பாதை இருப்பாக உரிமை கோருவதாகவும், மனுதாரர் பிராதில் வண்டிப்பாதை என்று கூறிவிட்டு தற்பொழுது அதை " பொது தடம்" என்று இம்மனுவில் மாற்றிமாற்றி கூறுவதாகவும், உண்மையில் மனுதாரருக்கு இந்த எதிர்மனுதாரரின் சொத்தான க.ச.நெ.243/2, 242/5 வழியாக மனுதாரருக்கு எவ்வித தடபாத்தியமும் இல்லை என்றும்,

மனுதாரரின் உரிமை ஆவணங்களில் 03.12.1999 மற்றும் 31.08.2015 தேதிய பாகசாசனங்கள் அவரது பூமியான தாவா சொத்துக்களுக்கு செல்ல ஏற்கனவே வண்டிப்பாதை கண்டுள்ளதாகவும், இம்மனுபடி மனுதாரருக்கு எவ்வித பரிகாரமும் சட்டப்படி கிடைக்கதக்கதல்ல என்றும், மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை வாதி என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலையில் இவ்விடத்தில் கட்டளை 6 விதி 17–ன் வகைமுறையை குறித்து உரைக்கபடவேண்டியது அவசியமாக உள்ளது.

Order 6 Rule 17 CPC
17. Amendment of pleadings.-

The Court may at any stage of the proceedings allow either party o alter or amend his pleadings in such manner and on such terms as may be just, and all such amendments shall be made as may be necessary for the purpose of determining the real question in controversy between the parties.

Provided that no application for amendment shall be allowed after the trial has commenced, unless the Court conies to the conclusion that in spite of due diligence, the party could not have raised the matter before the commencement of trial.

5.3.) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் தரப்பினர்களுக்கு இடையே உள்ள உண்மையான பிரச்சனைகளை முடிவு காண வேண்டி தரப்பினர்களின் வாதுரையை திருத்த அனுமதிக்கலாம் என்பதையும் போதிய கவனமுடன் இருந்தும் விடுப்பட்ட பொருண்மைகளை சாட்சிய விசாரணைக்கு பிறகு விடுபட்ட சங்கதிகளை திருத்த அனுமதிக்கலாம் என்பதையும் தரப்பினர்கள் போதிய கவனமுடன் இல்லாமல் வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட பிறகு வாதுரைகளை திருத்த மனு தாக்கல் செய்தால் அதனை அனுமதிக்க முடியாது என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துககொண்டுள்ளது.

5.4.) இந்த மனுவில் தாவா வண்டித்தடம் எந்த எந்த காலைகள் வழியாக செல்கிறது என்பதையும் அந்த காலை எண்களையும் வழக்குரையில் திருத்தி சேர்க்க பரிகாரம் கோரப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்துள்ள வாதத்தில் மனுப்படி வழக்குரையை திருத்தி காலை எண்களை சேர்க்க அனுமதித்தால் இந்த பிரதிவாதிகளுக்கு பாதகம் ஏற்படும் என்றும், வழக்கின்

தன்மை மாறுப்படும் என்றும், வாதி கோரியுள்ள பரிகாரம் காலவரையறை கடந்தது என்றும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Revajeetu Builder and developer Vs Narayana swamy & sons and others 2010 (1) MWN (civil) 460, மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 2013 (3) MWN ( civil) 598, 2011 (1) MWN (civil) 571, 2010 (1) MWN ( civil) 393, 2011 (2) MWN (civil) 259, 2017(1) MWN (civli) 714 முன்தீர்ப்புகளை மேற்கோள் காட்டி மனுவினை அனுமதிக்க ஆட்சேபனை செய்து வாதத்தை முன்வைத்தார்.

5.5.) பிரதிவாதிகள் தரப்பில் முன்வைத்த வாதத்தை கவனமாக பரிசீலித்து இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. மேற்கண்ட முன்தீர்ப்புகளை கவனமாக பரிசீலித்ததில் மேற்கண்ட முன்தீர்ப்புகளின் பொருண்மைகள் கட்டளை 6 விதி 17–ன் நோக்கத்தை எடுத்து காண்பிப்பதாக உள்ளதே தவிர இந்த வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்துவதாக அமையவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வரும் வழக்கில் வழங்கியுள்ள கருத்து செறிவுமிக்க முன்தீர்ப்பின் வழிக்காட்டுதல்களை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

5.6.) Life Insurance Corporation of India Vs. Sanjeev Builders Private Limited and Another [2022 SCC Online SC 1128], Hon'ble Supreme court held in para 70 as under;

"70. Our final conclusions may be summed up thus:

(i) Order II Rule 2 CPC operates as a bar against a subsequent suit if the requisite conditions for application thereof are satisfied and the field of amendment of pleadings

falls far beyond its purview.

The plea of amendment being barred under Order II Rule 2 CPC is, thus, misconceived and hence negatived.

(ii) All amendments are to be allowed which are necessary for determining the real question in controversy provided it does not cause injustice or prejudice to the other side. This is mandatory, as is apparent from the use of the word “shall”, in the latter part of Order VI Rule 17 of the CPC.

(iii) The prayer for amendment is to be allowed

(i) if the amendment is required for effective and proper adjudication of the controversy between the parties, and

(ii) to avoid multiplicity of proceedings, provided

(a) the amendment does not result in injustice to the other side,

(b) by the amendment, the parties seeking amendment does not seek to withdraw any clear admission made by the party which confers a right on the other side and

(c) the amendment does not raise a time barred claim, resulting in divesting of the other side of a valuable accrued right (in certain situations).

(iv) A prayer for amendment is generally required to be allowed unless

(i) by the amendment, a time barred claim is sought to be introduced, in which case the fact that the claim would be time barred becomes a relevant factor for consideration,

(ii) the amendment changes the nature of the suit,

(iii) the prayer for amendment is malafide, or

(iv) by the amendment, the other side loses a valid defence.

(v) In dealing with a prayer for amendment of pleadings, the court should avoid a hypertechnical approach, and is ordinarily required to be liberal especially where the opposite party can be compensated by costs.

(vi) Where the amendment would enable the court to pin-pointedly consider the dispute and would aid in rendering a more satisfactory decision, the prayer for amendment

should be allowed.

(vii) Where the amendment merely sought to introduce an additional or a new approach without introducing a time barred cause of action, the amendment is liable to be allowed even after expiry of limitation.

(viii) Amendment may be justifiably allowed where it is intended to rectify the absence of material particulars in the plaint.

(ix) Delay in applying for amendment alone is not a ground to disallow the prayer. Where the aspect of delay is arguable, the prayer for amendment could be allowed and the issue of limitation framed separately for decision.

(x) Where the amendment changes the nature of the suit or the cause of action, so as to set up an entirely new case, foreign to the case set up in the plaint, the amendment must be disallowed. Where, however, the amendment sought is only with respect to the relief in the plaint, and is predicated on facts which are already pleaded in the plaint, ordinarily the amendment is required to be allowed.

(xi) Where the amendment is sought before commencement of trial, the court is required to be liberal in its approach. The court is required to bear in mind the fact that the opposite party would have a chance to meet the case set up in amendment. As such, where the amendment does not result in irreparable prejudice to the opposite party, or divest the opposite party of an advantage which it had secured as a result of an admission by the party seeking amendment, the amendment is required to be allowed. Equally, where the amendment is necessary for the court to effectively adjudicate on the main issues in controversy between the parties, the amendment should be allowed. ( Vijay Gupta v. Gagninder Kr. Gandhi & Ors., 2022 SCC OnLine Del 1897)"

5.7.) மேற்கண்ட கருத்து செறிவுமிக்க முன்தீர்ப்பின் வழிக்காட்டுதல்களை கவனமாக பரிசீலித்து இந்த வழக்கின் பொருண்மைகளுடன் பொருத்தி பார்க்கையில் இந்த அசல் வழக்கானது இன்னும் சாட்சிய விசாரணை

தொடங்கப்படவில்லை. வாதி ஏற்கனவே தாவா வழித்தடம் பிரதிவாதிகளின் பூமியில் செல்வதாக குறிப்பிட்டு வாதுரைத்துள்ளார். ஆனால் எந்த காலை எண்ணில் தொடங்கி எந்த காலை எண் வழியாக செல்கிறது என்பதை குறித்து மட்டும் வாதுரைக்கப்படவில்லை. மேற்படி காலை எண்களை வாதிகளின் வாதுரையில் சேர்ப்பதால் காலவரையறை சட்டத்தின்படி பாதிப்பு எதுவும் இல்லை. மேலும் வழக்கின் தன்மை மாறுப்பாடு எதுவும் அடைவதாக தெரியவரவில்லை.

5.7.) பிரதிவாதிகளுக்கு மேற்படி திருத்த வழக்குரைக்கு ஏற்ப கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும் வேறு எந்த புதிய எதிர்வாதத்தையும் முன்வைக்கவும் வாய்ப்புகள் உள்ளது. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள பிரச்சனையானது வண்டித்தடம் சார்ந்த பிரச்சனையாகும். அந்த வண்டித்தடம் பிரதிவாதிகளின் பூமியில் செல்வதாக ஏற்கனவே வாதுரைக்கப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகளின் பூமிகளின் காலை எண்களை மட்டும் சேர்த்து வழக்குரையை திருத்த அனுமதிப்பதால் பிரதிவாதிகளுக்கு எந்த பாதகமும் ஏற்படுவதாக தெரியவரவில்லை. மேற்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின் IX வது குறிப்பின் படி வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முந்தைய திருத்த மனுவை அனுமதிக்க தடை ஏதும் இல்லை.

5.8.) தரப்பினர்களுக்கு இடையே உள்ள வண்டித்தட பிரச்சனையை தீர்வு காணவும், பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்கவும், வாதி தாக்கல்

செய்துள்ள இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்றும், காலதாமதத்தினால் ஏற்படும் செலவினங்களை பிரதிவாதிகளுக்கு ஈடு செய்ய வேண்டியது அவசியம் என்றும் இந்நீதிமன்றம் கருதுவதால் வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** 1ம் பிரதிவாதிக்கு ரூ.3,000/–ஐ செலவு தொகையாக வரும் 10.11.2023 தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை செலுத்த **அழைக்க 10.11.2023**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 03.11.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.11.03 09:33:46 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>பிற்சேர்க்கை :–</u>** இல்லை

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.11.03 09:33:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.ம.எண்.2/2023
இன்
அ.வ.எண்.3/2017
சீரான/வரைவு உத்தரவு
நாள்.03.11.2023
மா.உ.நீ., அவிநாசி